## நக்கல் நமசிவாயம்

நல்ல யோசிச்சு பார்த்தா கொரோனா நிவாரணமா அரசாங்கத்துக்கு நாங்கள் மூவாயிரம் குடுத்திருக்கம்...ரெண்டாயிரம் தானே எங்களுக்கு கிடைச்சது...




# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 313 பிலவ வருடம், ஆவணி மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை (26.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 16, 0115886187 - பக்கங்கள் 08

விலை ரூ.30


## அஜித் ரோஹணவின் உடல்நிலையில் முன்னேற்றம்

நா. தினுஷா

கொரோனா தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பிரதி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

02»

# ஊரடங்கை நீடிக்க அரசு ஆலோசனை!

## நாட்டை 6ஆம் திகதிவரை முடக்க சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தல்

### பொருளாதார தாக்கம் ஏற்படுமென தளர்வுகளுடன் தொடர ஆராய்வு


•நமது விசேட செய்தியாளர்

நாட்டில் தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 30ஆம் திகதியுடன் முடிவுறுத்தாமல் அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை அதாவது, மேலதிக ஒருவார காலத்திற்கு நீடிக்குமாறு சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து ஊரடங்குச் சட்டத்தை மேலும் நீடிக்க அரசு ஆலோசித்து வருகின்றது. அத்துடன், அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து கட்டுப்பாடுகளுடன் முன்னெடுக்கவும் அரசு ஆலோசித்து வருகிறது.

தற்போது அமுலிலுள்ள பொதுமுடக்கத்துடன் கூடிய ஊரடங்கு வெறுமனே 10 நாட்களுக்கு மட்டுமே அமுலில் இருப்பதாலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும்...

02»



பேலிகொடை மொத்த விற்பனை நிலையத்தில் மரக்கறிவகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பெருந்திரளானோர் நேற்று வருகை தந்திருந்ததை படத்தில் காணலாம்.

(படப்படிப்பு: பிரதீப் தம்பரகே)

## குறைந்த வருமானமுள்ளோருக்கே தனிமைப்படுத்தல் நிவாரணம்

### அரசு அறிவிப்பு

தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களை இனி வரும் காலங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02»

## 3ஆவது தடுப்பூசி அவசியப்படுமா?

### ஆராய்வதாக கூறுகிறார் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன

•நா. தினுஷா

ஒக்டோபர் மாதத்தில் கொவிட் -19 வைரஸ் தொற்றுக்கெதிரான 3ஆவது தடுப்பூசியின் தேவை தொடர்பில் ஆராயப்படும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர்...



02»

## நிவாரணப்பொதிக்கும் கட்டுப்பாடுகளா?

### அரசை சாடுகிறார் சஜித்



02»

## 23 நாட்களில் 3,242 மரணங்கள்

### முதல் ஆயிரம் உயிரிழப்புகள் 13 மாதங்களில் பதிவு

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரத்தால் நாளுக்கு நாள் மரணங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை 7 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், கடந்த 23 நாட்களில் 3 ஆயிரத்து 242 மரணங்கள் பதிவாகியுள்ளன.

02»


## சிறுவர்களுக்கு ஒட்சிசன் அளவு குறைவடையலாம்

### அறிகுறிகள் தென்படாதென நிபுணர்கள் எச்சரிக்கை

•நா. தினுஷா

சிறுவர்களுக்கு முன்கூட்டிய எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் அவர்களுடைய உடலில் ஒட்சிசன் அளவு குறைவடையலாம் என கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே...

02»



## இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் சபையிலிருந்து இராஜ் திடீர் இராஜினாமா

பிரபல சிங்களப் பாடகர் இராஜ் வீரரத்ன தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபைக்கான உறுப்பினர் பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு இராஜ் வீரரத்ன கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தான் இந்த முடிவை எடுத்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

02»

## சுகாதாரப் பணியாளர்களில் நான்கில் ஒருவருக்கு கொரோனா

### அகில இலங்கை தாதிமார் சங்கம் தகவல்

•யோ.தர்மராஜ்

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் அனைத்து சுகாதாரப் பிரிவினருக்கும் அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டால் அவர்களில் நான்கில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்படும் என அகில இலங்கை தாதிமார் சங்கத்தின் பொதுச் செயலாளர்...

02»



புறக்கோட்டை நான்காம் குறுக்குத்தெருவில் நேற்று (25) வழமைபோல் மொத்த விற்பனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

## கொரோனா ஒழியும்வரை சம்பளம் பெறமாட்டேன்

### மக்கள் நலனுக்காக வழங்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதி

•யோ.தர்மராஜ்

நாட்டு மக்களின் வரிப்பணத்தில் கிடைக்கும் சம்பளத்தை மனசாட்சிக்கு எதிராக தன்னுடைய தேவைக்காக பயன்படுத்த முடியாது. ஆகவே, கொரோனா இல்லாதொழியும்வரை...

02»

## பிராணிகளுக்கான ஒட்டுண்ணி மருந்து கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும்

### பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் அசோக்க தங்கல்ல

•நா. தினுஷா

நாட்டில் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் தொற்று நோய்களுக்கு இலக்காகும் செல்லப் பிராணிகளை குணப்படுத்த பயன்படுத்தப்படும் மருந்தானது, கொரோனா நோயாளிகளை குணப்படுத்த மிகவும் பொருத்தமானதாக அமையுமென பேராதனை பல்கலைக்கழக கால்நடை மருத்துவ பீடத்தின் பேராசிரியர் அசோக்க தங்கல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1975ஆம் ஆண்டில் உற்பத்திசெய்யப்பட்ட இந்த மருந்து, அமெரிக்கா, பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்கா உள்ளிட்ட...

02»

# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் இன – மத பேதமற்ற விசாரணைகள் அவசியம்

## சர்வமதத் தலைவர்கள் கோரிக்கை

*நா. தினுஷா*

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் இனவாதம் மற்றும் மதவாத அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் அரசியல் தலையீடற்ற வெளிப்படையான விசாரணைகள் அவசியமென சர்வமதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

இததொடர்பில் விளக்கமளித்து சர்வமதத் தலைவர்களால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஒருசில உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் கடந்த காலங்களில் வெளியான ஊடக அறிவித்தல்களிலிருந்து மறைக்கப்பட்டமைக்கு காரணம், அவர்கள் சிங்கள பௌத்தர்களாக இருப்பதனாலும் அவர்களை உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளாக கருதப்படுவதாகும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணைகள் மற்றும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை இனவாத மற்றும் மதவாதமாக்குவதே இதன் பிரதான நோக்கம் என்பது இந்த ஊடக அறிக்கைகளில் தெளிவாக தெரியவருகின்றன. இந்த அறிவித்தலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான அடிப்படைவாத கருத்தின் அடிப்படையிலல்லாமல் உயிர்த்த ஞாயிறு தினதாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் அரசியல் அச்சுறுத்தல்களின்றி முறையாகவும் வெளிப்படைத்தன்மையின் அடிப்படையில் முன்னெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டிக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சபை அமர்வுகளை நடத்துவதா? செப். 2இல் இறுதித் தீர்மானம்

*யோ.தர்மராஜ்*

**நாடாளுமன்றத்தின் அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து தீர்மானம் எடுக்க எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடவுள்ளது.**

**நாட்டில் கொரோனா தொற்றுப்பரவல் தீவிரமடைந்துள்ள காரணத்தினால் நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுப்பதா, இல்லையா என்பது குறித்து இதன் போது விரிவாக ஆராயப்படவுள்ளது.**

**இதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வை நடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

# அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க அமைச்சரவை உப குழு அரசுக்குப் பரிந்துரை

*யோ.தர்மராஜ்*

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டுமென சம்பள முரண்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் உப குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று சூழ்நிலை காரணமாக ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் ஏற்பட்டுள்ள தாக்கத்தை கணக்கிற்கொண்டு, இந்த முன்மொழிவுகளை எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்து, கட்டம் கட்டமாக செயற்படுத்துவது பொருத்தமானது எனவும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் சேவைகளை ஒன்றிணைத்து ஒரே சேவையாக்க வேண்டும் எனவும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

அதன் முதல் கட்டமாக ஆசிரியர், அதிபர் சேவையை ஒன்றிணைந்த சேவையாக மாற்றுவதற்கான விதிமுறைகளை எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்பு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் எனவும் உப குழு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபரிகளின் சம்பள முரண்பாடு குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை கடந்த திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக அடுத்த வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, விமல் வீரவங்ச, பிரசன்ன ரணதுங்க மற்றும் மகிந்த அமர வீர ஆகிய அமைச்சர்கள் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

# ஆறு களஞ்சியசாலைகளில் 40 இலட்சம் கிலோ அரிசி மீட்பு

## பொலனறுவை, அம்பாறையில் அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு

*யோ.தர்மராஜ்*

பொலனறுவை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சட்டத்துக்குப் புறம்பாக இடைத்தரகர்களினால் 6 களஞ்சியசாலைகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 40 இலட்சம் கிலோ கிராம் அரிசி மீட்கப்பட்டதையடுத்து களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று நிலைமையால் நாடுகள் முடக்கப்படும்போது அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. எனினும், பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் பொதுமக்களுக்கான அரிசி விலையை அதிகரிப்பதற்கு இடமளிக்க முடியாது. ஆகவே, மக்களுக்குத் தேவையான அரிசியை 100 ரூபாவுக்கும் குறைவாக வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோதமாக அதிக விலையில் அரிசி விற்பனைசெய்யும் வியாபாரிகளுக்கு விதிக்கப்படும் தண்டப் பணத்தை 2 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தி அமைச்சரவை அனுமதியுடன் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. அரிசி பற்றாக்குறை ஏற்படாதிருப்பதற்கு தேவையான தொகையை இறக்குமதிசெய்து களஞ்சியப்படுத்துவதற்காக கடன் கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபைத் தலைவரின் தலைமையில் குழுவொன்று பொலனறுவை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று, இடைத் தரகர்களினால் பாரியளவிலான அரிசித் தொகை பதுக்கிவைக்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள் சீல் வைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன்படி, இன்று (நேற்று) நண்பகல் வரை மாத்திரம் 40 இலட்சம் கிலோ அரிசி பதுக்கிவைக்கப்பட்டிருந்த 6 களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான நீதிமன்ற செயற்பாடுகளும் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார்.

## நிவாரணப் பொதிக்கும்...

இறப்புக்கும் மத்தியில் போராடும் மக்களின் நிவாரணப் பொதிக்கும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதன்மூலம் இந்த அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற தன்மை தெரிந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொரோனா பாதிப்புள்ளானவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொதிகள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் சஜித் மேலும் கூறியுள்ளதாவது;

தனிமைப்படுத்தல் நிவாரணப் பொதிகளையும் அரசாங்கம் கையகப்படுத்திவிட்டது. தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்டுவந்த ரூ.10,000 பெறுமதியான நிவாரணப் பொதியை மட்டுப்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மட்டும் வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

மக்களின் கழுத்தை நெரித்தேனும் தனது இலக்குகளை அடையவே தயங்காத அரசாங்கம், கொரோனா பேரழிவின் காரணமாக மிகவும் உதவியற்றுள்ள மக்களை பழிவாங்கத் தொடங்கியுள்ளது.

கொடூரமான கொரோனா பரவலிலிருந்து உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவே நாட்டை குறுகிய காலத்திற்கு மூடுவதற்கு நாங்கள் அரசாங்கத்தை கட்டாயப்படுத்தினோமேயன்றி, மக்களின் வாழ்க்கையை ஒடுக்குவதற்கு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் அல்ல.

எங்களது தொடர்ச்சியான கோரிக்கையை துரிதப்படுத்தாமல் ஒத்திவைப்பதன் விளைவுகளை முழுநாடும் அனுபவித்து வருவதோடு, அந்த தன்னிச்சையான நடவடிக்கையால் நமது நாடு கொரோனா பேரழிவால் பாதிக்கப்பட்ட முன்னணி நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது.

மூடப்பட்ட பல நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கையை ஆதரிப்பதற்காக நிவாரணப் பொதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. ஆனால், இலங்கையில் நடப்பது என்னவென்றால், எங்கள் செல்வாக்கின் காரணமாக மக்களுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச நிவாரணப் பொதி கூட நிறுத்திவைக்கப்படுகிறது.

அரசாங்கம் 'மக்களுக்கு தியாகம்' செய்ய அழைக்கிறது, ஆனால், கொரோனா அச்சுறுத்தல் தொடங்கிய நாளிலிருந்து மக்கள் செய்த தியாகங்களை அரசாங்கம் பார்க்கவில்லை என்பது போலவும், தெரியாது என்பது போலவும் இருப்பதை எங்களால் நம்பமுடியாதுள்ளது.

மக்களை தியாகம் செய்யுமாறு கேட்கும் அரசாங்கமே அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை வரலாறு காணாத அளவுக்கு உயர்த்தியுள்ளது.

மக்களை தியாகம் செய்யுமாறு கோரும் அரசாங்கமே உணவு செலவழிப்பின் ஆற்றலில் உலகில் மிகவும் வறிய ஐந்தாவது ஸ்தானத்திற்கு இட்டுச்சென்றும், அவர்களின் ஊதியத்தில் 66 வீத உணவிற்காக செலவழிக்கும் நிலையையும் ஏற்படுத்தியது இந்த அரசாங்கமே.

பணக்கார குபேரர்களுக்கு வரிச்சலுகை அளித்து, நாட்டுக்கு 600 மில்லியன் ரூபா வருவாய் பறிபோக காரணமாக இருந்த இந்த அரசாங்கத்தாலேயே மக்கள் தியாகம் செய்யுமாறு சொல்லப்படுகிறார்கள்.

சீனி மற்றும் தேங்காயெண்ணெய் மோசடிகள் மூலம் அதன் நண்பர்களுக்கு நிவாரணம் அளித்த அரசாங்கத்தாலயே மக்கள் தியாகம் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஒரு நாளைக்கு மூன்று வேளை போக ஒரு வேளையேனும் ஏதாவது சாப்பிடாமல் பெருமூச்சு விடும் நூறாயிரக்கணக்கான மக்கள் வசிக்கும் ஒரு நாட்டில் தியாகம் செய்யுமாறு மக்களிடம் கேட்பதை விட பெரிய கோரிக்கை எதுவும் இல்லை.

கொரோனா பேரழிவின் மத்தியில் வாழ்க்கைக்கும் இறப்புக்கும் மத்தியில் போராடும் மக்களின் நிவாரணப் பொதிக்கும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால் இந்த அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற தன்மையின் தரத்தை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம் - என்று தெரிவித்துள்ளார் சஜித்.

## குறைந்த...

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கை...

மரண வீதம் தொடர்ந்தும் அதிகரிப்பதாலும் குறைந்தபட்சம் மேலும் ஒரு வார காலத்திற்காவது முடக்கத்தை தொடர வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் நாளை வெள்ளிக்கிழமை கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கூட்டமொன்று இடம்பெறவுள்ளதால் அதில் இந்த விடயங்களை ஆராய்ந்து இறுதி முடிவை எடுக்க அரச உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நாட்டை தொடர்ந்து முடக்காமல், ஏற்கனவே அறிவித்தபடி எதிர்வரும் 30ஆம் திகதி திறக்குமாறு அரசின் மூத்த அமைச்சர்கள் பலர் அரச உயர்மட்டத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

## 3ஆவது தடுப்பூசி...

விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதமளவில் நாட்டின் சகலருக்கும் தடுப்பூசியை ஏற்றும் பணியை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த மாதம் இறுதியளவில் 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்குத் திட்டமிட்டிருக்கின்றது.

தற்சமயம் ஒரு கோடி 20 இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு முதல் டோஸ் ஏற்றப்பட்டிருக்கின்றது. இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டோரின் மொத்த எண்ணிக்கை 60 இலட்சத்தைக் கடந்திருப்பதாகவும் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன மேலும் தெரிவித்தார்.

## கொரோனா ஒழியும்வரை...

தன்னுடைய சம்பளத்தை பெற்றுக்கொள்ளாது மக்களின் நலனுக்காக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான கடிதத்தை அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் தான் ஆற்றிய விசேட உரையின்போது, பெரும் கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்களில் ஒரு பகுதியை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு பல பதில்கள் கிடைக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தங்களின் மாத சம்பளத்தை இவ்வாறு வழங்குவது பெரும் மகிழ்ச்சியளிக்கின்றன.

இந்த மாதத்திலிருந்து கொரோனா தொற்று இல்லாதொழியும்வரை தனக்கு கிடைக்கும் சம்பளத்தை நாட்டுக்காகவும் அம்பாந்தோட்டை மாவட்ட மக்களின் உணவு வழங்குதல், சுகாதார தேவைப்பாடுகளுக்காகவும் ஒதுக்குமாறு கோரிய கடிதத்தை அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் கையளித்து கோரிக்கைவிடுத்துள்ளேன்.

கொரோனா எப்போது இல்லாதொழியும் என்பதை கூற முடியாது. 2025 ஆம் ஆண்டும் தங்களுக்கு கொரோனாவிலிருந்து விடுபட முடியாது போகலாம். நாட்டு மக்களின் வரிப் பணத்தில் கிடைக்கும் சம்பளத்தை மன சாட்சிக்கு எதிராக தன்னுடைய தேவைக்காக பயன்படுத்த முடியாது. ஆகவே, கொரோனா இல்லாதொழியும்வரை நான் என்னுடைய சம்பளத்தை பெற்றுக்கொள்ள மாட்டேன். சிலர் இந்த தியாகத்தை கேள்விக்குறியாக்குகின்றனர். நான் வேறு வருமானமுடையவரல்ல. ஆனால், நான் முன்பு வாழ்ந்த வழிமுறையொன்றுள்ளது. அதன்படி, என் வாழ்க்கையை நான் முன்னெடுத்துச் செல்வேன் - என்றார்.

## சிறுவர்களுக்கு...

சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் நளின் கித்துல்வத்த தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சிறுவர்களுக்கு அவ்வப்போது ஒட்சிசன் அளவை பெற்றோர் அவதானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தீவிர கிசிச்சைப் பிரிவில் உள்ள ஆறு கட்டில்களும் நிரம்பிவிட்டன. அவை அனைத்திலும் சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலையின் மருத்துவர் நளின் கித்துல்வத்த மேலும் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவை சேர்ந்த சுகாதார பணியாளர்களும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மோசமான நிலை உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் திடீர் ஒட்சிசன் குறைவினை எதிர்கொள்ளக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் ஓடும்போது ஒட்சிசன் அளவு குறைவடைவது போன்ற அறிகுறிகள் குறித்து அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அஜித் ரோஹணவின்...

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் தொடர்ச்சியாக அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அஜித் ரோஹண தீவிர சிகிச்சைப் பிரிவில் மிக மோசமான நிலையை எட்டியுள்ள வகையில் சமூக வலைத்தளங்களில் வெளியான புகைப்படங்கள் தவறானவை என 'தமிழன்' ஆசிரியபீடம் உறுதிப்படுத்தியது.

போர்த்துக்கேயரான டியாகோ ஆரியீவ் என்ற நபர் ஒருவர் கொரோனாவை வெற்றிகொண்டதாக அண்மையில் பதிவொன்றினை வெளியிட்டிருந்தார். அதில் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலைமையில் இருந்த காணொளியொன்றை வெளியிட்டுள்ளார். அந்தக் காணொளியில், அவர் அஜித் ரோஹணவை போன்ற தோற்றத்தில் உள்ளார்.

அதனைப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்களில் தவறான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 23 நாட்களில்...

இதேவேளை, கடந்த 23 நாட்களில் நாட்டில் 73 ஆயிரத்து 812 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெல்ட்டா திரிபினால் நாட்டில் மீண்டும் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை 4 ஆயிரத்து தாண்டியுள்ளதுடன், மரணங்களின் எண்ணிக்கை 200 ஐ அண்மித்துள்ளது.

நாட்டில் முதல் ஆயிரம் கொரோனா மரணங்கள் பதிவாகுவதற்கு 2020.03.29ஆம் திகதி தொடக்கம் 2021.05.19 ஆம் திகதிவரை 13 மாதங்கள் சென்றாலும் இறுதி ஆயிரம் மரணங்கள் பதிவாகுவதற்கு 2021.08.15ஆம் திகதி தொடக்கம் 2021.08.20ஆம் திகதி வரை வெறுமனே 6 நாட்களே சென்றுள்ளன.

முதல் ஆயிரம் மரணங்களுக்கு 13 மாதங்கள் சென்ற நிலையில், 6 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் வரையான இறுதி ஆயிரம் மரணங்களுக்கு வெறும் 6 நாட்களே சென்றுள்ளன.

இதேவேளை, ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரையான 23 நாட்களில் மாத்திரம் 3 ஆயிரத்து 242 மரணங்கள் பதிவாகியுள்ளன. முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை 956 மரணங்களும் ஓகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரையான 10 நாட்களில் ஆயிரத்து 719 மரணங்களும் 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையான 3 நாட்களில் 396 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரையான 23 நாட்களில் மாத்திரம் 73 ஆயிரத்து 812 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை 27 ஆயிரத்து 37 கொரோனா நோயாளர்களும் ஓகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையான 10 நாட்களில் 34 ஆயிரத்து 272 கொரோனா நோயாளர்களும் 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரையான 3 நாட்களில் 12 ஆயிரத்து 503 கொரோனா நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மேலும், ஓகஸ்ட் 24ஆம் திகதி 4 ஆயிரத்து 446 கொரோனா நோயாளர்கள் பதிவாகியதுடன், நாட்டின் மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 98 ஆயிரத்து 801 அதிகரித்து 4 இலட்சத்தை நெருங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## செல்லப்பிராணிகளுக்கான...

நாடுகளில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒட்டுண்ணிகளின் தொற்றுநோய்களுக்கு மேலதிகமாக மனிதர்களுக்கு ஏற்படும் வைரஸ் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மருந்து கொரோனா நோயாளிகளுக்கு ஏற்றது என்று சில மருத்துவர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐவர்மெக்டின் (Ivermectin) எனப்படும் இந்த மாத்திரையின் விலை 100 ரூபா எனவும், கொரோனாவுக்கு முன்னதாக மாதமொன்றுக்கு ஆயிரம் மாத்திரைகள் வரையில் விற்பனையானதோடு, கொரோனாவுக்கு பின்னர் 30 ஆயிரம் மாத்திரைகள் வரை விற்பனையாவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுள்ள ஒருவர் நாளொன்றுக்கு 3 மாத்திரைகள் எடுத்துக் கொண்டால் நோயை குணமாக்கும் என்பதோடு, தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்பை நிரந்தரமாக குறைக்கும் என்று அமெரிக்காவில் நிபுணர்கள் கண்டறிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சுகாதாரப் பணியாளர்களில்...

எச்.எம்.எஸ்.பி.மெதிவத்த தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு கொரோனா தொற்று பரிசோதனை முன்னெடுக்கப்படாமை குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நாளாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுத்து அவர்களை நோயாளர் பிரிவுகளில் அனுமதிப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால், வைத்தியசாலையிலுள்ள ஏனைய நோயாளர்களுக்கும் சுகாதாரத்துறையினருக்கு பாரிய பாதிப்பை ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் அனைத்து சுகாதாரப் பிரிவினருக்கும் அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டால் நான்கிற்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்படும் - என்றார்.

## இளைஞர்...

இதேவேளை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்களாக இராஜ் வீர ரத்னவும், தெஹானி இமாராவும் கடந்த வருடம் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, அரசியல் கருத்து முரண்பாடுகள் காரணமாகவே இராஜ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 26.08.2021 வியாழக்கிழமை – ஆவணி 10**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**சுப நேரங்கள்**

காலை 11.00
பிற்பகல் 12.12
மாலை 4.46 - 6.15

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 1.43 - 3.14

**குளிகை காலம்**
காலை 9.08 - 10.40

**எமகண்ட காலம்**
காலை 6.07- 7.38

**துர் முகூர்த்தம்**
காலை 10.10 - 10.59
மாலை 3.04 - 3.53

**நட்சத்திரம்: ரேவதி**
இரவு 10.29 வரை

**யோகம்: கண்டம்**
அதிகாலை 5.24 -
27.08.2021
அதிகாலை 5.25 வரை

**திதி: அமர பட்ச சதுர்த்தி**
மாலை 5.14 வரை

அமர பட்ச பஞ்சமி
மாலை 5.14 -
27.08.2021 மாலை 6.49

**முற்கரணம்: பாலவம்**
அதிகாலை 4.41 -
பிற்பகல் 5.14

**பிற்கரணம்: கௌலவம்**
பி.ப 5.14 –
27.08.2021
அதிகாலை 5.57

**மேடம்**: தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நன்மை. உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**ரிஷபம்**: கல்வியை நிறைவுசெய்து வேலைகளுக்காக காத்திருப்போருக்கு சுப செய்திகள் கிடைக்கக்கூடும். அரசாங்க ஒப்பந்த வேலைகள் துவங்கும்.

**மிதுனம்**: முன்பு செய்த சில நிதி ஒதுக்கீடுகள் பலனளிக்க துவங்கும்.
உடல்நலத்தில் அக்கறை தேவைப்படலாம.

**கடகம்**: தம்பதியரிடையே வெகுமதிகள் வழங்கிக் கொள்வார்கள். புதிய திறமைகள் உருவாகும். பணிகளை உற்சாகத்துடன் நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**: பணிகள் எதிர்மறை எண்ணங்களால் நிறைவுபெறாத நிலை உண்டாகலாம். சில ஏமாற்றங்களும் அடையலாம். சொந்த பிரச்சினைகள் நீங்கப் பெறலாம்.
சந்திராஷ்டமம்: பூரம் நட்சத்திரத்திற்கு பிற்பகல் 4.00 வரை உத்தரம் நட்சத்திரம் பாதம் 1க்கு பி.ப. 4.00 - இரவு 10.29 வரை

**கன்னி**: வணிகத்தில் புதிய பங்குதாரர்களும், இலாப அதிகரிப்புகளும் கிடைக்கப் பெறலாம். உறவுகளில் உங்கள் அன்பும் பெருகும்.
சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு இரவு 10.29 - 27.08.2021 மாலை 6.10 வரை

**துலாம்**: பெற்றோரின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். சில மங்கள நிகழ்வுகளுக்கும் செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். திருமணத்திற்கு காத்திருப்போருக்கு சுப செய்திகள் கிடைக்கப் பெறலாம். ஆன்மீக எண்ணங்கள் உருவாகும்.

**தனுசு**: நிதி பிரச்சினைகள் நீங்கும். பிள்ளைகளின் கல்வியும், வீட்டில் சூழலும் மகிழ்ச்சி தரும். பிரபஞ்சம் உங்களுடன் ஒத்துழைக்கும்.

**மகரம்**: தம்பதியரிடையே பெறப்படும் ஆலோசனைகள் பயன் தரும். வேலை தேடுவோருக்கு வருவாய்க்கான நல்ல நிலை உருவாகலாம்.

**கும்பம்**: வரவேண்டிய பண வரவுகள் கிடைக்கலாம். பயணங்களில் கவனம் தேவைப்படலாம். பிள்ளைகளிடமிருந்து சுப செய்திகள் கிடைக்கப் பெறலாம்.

**மீனம்**: வணிகத்தில் அதிக வேலைகளிலும் மகிழ்ச்சி கிடைக்கும். கடன்களில் ஒரு சிறிய தொகையாவது திரும்ப செலுத்த நல்ல நாள்.

# மங்களவின் கொள்கை - தூரநோக்கு சிந்தனைகள் தாங்கிக்கொள்ள முடியாத இழப்பு

**ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் இரங்கல்**



முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் எதிர்பாராத மறைவு எனக்கு தனிப்பட்ட இழப்பு என்பதுடன், எமது தேசத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பாகும் - என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துச் செல்வதில் அவர் முன்நின்று செயற்பட்டதுடன், சமத்துவம் மற்றும் பல்லினத்தன்மையை நிலைநாட்டுவதில் முக்கிய பங்காற்றியவர்.

மலேஷிய உயர்ஸ்தானிகர் பதவியை நான் பொறுப்பேற்பதற்கு தனிப்பட்ட முறையில் அவர் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி உற்சாகப்படுத்தினார். எனது சகல பிரசாரங்களிலும் அவர் எப்பொழுதும் முன்நிலையில் இருந்து செயற்பட்டதுடன், என்னுடனும் எனது குடும்பத்தினருடனும் ஆதரவாளர்களுடனும் உடனிருந்து செயற்பட்டவர்.

தேசமே முதன்மையானது என்ற அன்னாரின் கொள்கை மற்றும் தூரநோக்கு சிந்தனைகள் என்பன தாங்கிக்கொள்ள முடியாத இழப்பாகும்.

அவரின் கம்பீரமான தோற்றம், நகைச்சுவை உணர்வு, தொழில் தர்மம் மற்றும் இலங்கை மக்கள் மீதான அன்பு என்பன நாம் அனைவராலும் எப்போதுமே உணரப்படும் இழப்புகளாக இருக்கும்.

# பண்டாரவன்னியனின் 218 ஆவது வெற்றி நாள்; முல்லைத்தீவில் அஞ்சலி

(விஜயரத்தினம் சரவணன்)



முல்லைத்தீவு கோட்டையை வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் வெற்றிகொண்ட 218ஆம் ஆண்டு வெற்றி நாளான நேற்று முல்லைத்தீவில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் பண்டாரவன்னியனுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு நிலைமையால் வருடந்தோறும் பண்டாரவன்னியன் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்படும் முல்லைத்தீவு நகர்ப்பகுதிக்கு செல்ல முடியாத நிலையில் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் பண்டாரவன்னியனின் திருவுருவப்படத்துக்கு சுடர் ஏற்றி, மலர்தூவி நினைவுகூரல் மேற்கொள்ளப்பட்டது

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஆங்கிலேயரின் கோட்டையை 1803ஆம் ஆண்டு இதேநாளில் போரிட்டு கைப்பற்றி இரண்டு பீரங்கிகளையும் மாவீரன் பண்டாரவன்னியன் கைப்பற்றிய நாளாக இன்றைய நாள் அடையாளப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் நினைவேந்தல் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது .

# சட்டவிரோதமாக மதுபானம் விற்பனைசெய்த ஒருவருக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு முகத்துவாரப் பகுதியில் ஊரடங்கு வேளையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்கையில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 65 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மட்டு தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸ் சார்ஜன் ரி. கிருபாகரன் தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான நேற்று முகத்துவாரம் பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது நீண்டகாலமாக சட்டவிரோதமாக அரச மதுபானங்களை வியாபாரம் செய்துவந்த ஒருவரை பெருமளவிலான மதுபான போத்தல்களுடன் கைதுசெய்துள்ளனர்.

# மங்கள சமரவீரவின் அரசியல்

## ஓர் அஞ்சலிக் குறிப்பு



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி சமூக ஊடகங்களில் தமிழர்களினால் செய்யப்பட்ட பதிவுகளுக்கு எதிர்மறையான பிரதிபலிப்பை பலரும் வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது. அது பற்றி சிறு குறிப்பு.

எல்லாவற்றையும் வெறுமனே கறுப்பாகவும் வெள்ளையாகவும் மாத்திரம் பார்த்துப் பழகிய அரசியல் கலாசாரத்தின் வெளிப்பாடே அந்த எதிர்மறை பிரதிபலிப்புகள். இரண்டுக்கும் இடையிலுள்ள சாம்பல் நிறத்திலும் சிலவற்றை நோக்கவேண்டும்.

மங்களவின் அரசியலை மற்றைய தென்னிலங்கை சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிட்டே நோக்கவேண்டும். அவர் புலிகளை கடுமையாக விமர்சித்திருந்தார். ஆனால், தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ எதிராக இனத்துவேசத்தைப் பேசிய ஒரு சிங்கள அரசியல்வாதி அல்ல. எப்போதுமே மனித உரிமைகள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், அரசியல் தீர்வு பற்றியே அவர் உரத்துப் பேசியிருக்கிறார். போரை ஆதரித்து அவர் பேசியதில்லை. சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தை மாத்திரமல்ல, மகாசங்கத்தையும் பிற்போக்கான சிந்தனையைக்கொண்டவை என்று உரத்து விமர்சித்தவர் என்பதை மறந்துவிக்கூடாது. அதனால் அவர்களின் சீற்றத்துக்கு ஆளானவர். அத்தகைய ஒருவரை பற்றி அனுதாபமாக நோக்குவதில் எந்தத் தவறும் இல்லை. சந்திரிகாவின் ஆட்சியில் அநுருத்த ரத்வத்த போரை முன்னெடுத்தபோது மறுபுறத்தில் மங்கள் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வெண்தாமரை இயக்கத்தை ஆரம்பித்தார்.

சிங்கள – பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தின் இறுக்கமான பிடிக்குள் இருந்துவரும் இலங்கை சிங்கள அரசியல் சமுதாயத்திலும் அரசிலும் தாராளமய சிந்தனை கொண்டவர்கள் ஆற்றக்கூடிய பாத்திரத்திற்கு பெருமளவு மட்டுப்பாடுகள் இருக்கின்றன என்பதை விளங்கிக்கொண்டே மங்களவின் அரசியலை நோக்கவேண்டும். சிங்கள அரசியல் சமுதாயத்தில் இருந்திருக்கக்கூடிய லிபரல் டெமோகிரட் போக்குடைய அரசியல் தலைவர்களில் மங்கள முக்கியமானவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இறப்பதற்கு சில வாரங்கள் முன்னதாகக்கூட தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் அக்கறையில்லாமல் இருக்கும் இன்றைய அரசின் போக்கை மங்கள செய்தியாளர் மாநாடொன்றில் கண்டனம் செய்தார்.

எனவே, எதையும் ஒப்பிட்டுப்பார்த்து அணுகும் போக்கை கடைப்பிடித்தால் மங்களவின் மறைவை கணிசமான எண்ணிக்கை தமிழர்கள் அனுதாபமாக பார்ப்பதை புரிந்துகொள்வதில் சிரமம் இருக்காது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாமல் அது 70 வருடங்களாக நீடிப்பதற்கும் இனக்கலவரங்கள் மற்றும் போர் மூலம் தமிழர்கள் அழிக்கப்பட்டதற்கும் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடவேண்டியிருப்பதற்கும் மங்கள போன்றவர்கள் காரணமல்ல.

அவரின் மறைவு தாராளமய அரசியல் சிந்தனைக்கு பேரிழப்பு.

சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாஷைகளையும் மனக்குறைகளையும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் இந்த நாட்டில் என்றென்றைக்கும் சமாதானமும் அமைதியும் வரப்போவதில்லை என்ற நிலைப்பாட்டை இறுதிமூச்சுவரை மங்கள கொண்டிருந்தார். முள்ளிவாய்க்கால் போருடன் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்று சிங்கள அரசியல் சமுதாயத்தின் கணிசமான பிரிவினர் (ஆட்சியாளர்களும் கூட) நினைக்கின்ற ஒரு காலகட்டத்தில் மங்களவின் அரசியலை வேறுபடுத்திப் பார்ப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது?

யாழ்ப்பாணத்தவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி தனக்கு கவலையில்லை என்றும் தமிழர்களை பட்டினி போட்டால் சிங்கள மக்கள் சந்தோஷமடைவார்கள் என்றும் கூறிய ஜனாதிபதி ஒருவரின் ஆட்சியின் கீழும் நாம் வாழ்ந்தோம் என்பதை இன்றைய இளம் சந்ததி அறியுமோ தெரியவில்லை.



-வீ.தனபாலசிங்கம் –
மூத்த பத்திரிகையாளர்

அரசாங்கங்களில் முக்கிய அமைச்சராக பதவிவகித்து மங்கள கடைப்பிடித்த போக்குகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்படவில்லை. இனங்களுக்கிடையிலான உறவுகளை பாதிக்கக்கூடாது என்பதில் அவர் தனது அரசியல்வாழ்வு பூராவும் கடைப்பிடித்த நிலைப்பாட்டுக்காகவே இங்கு புகழாரம் சூட்டப்படுகிறது.

# காணிப் பிரச்சினை வலுவடைந்ததில் ஒருவர் இன்னொருவரை தாக்கிக் கொலை

**வட்டுக்கோட்டையில் சம்பவம்**



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட காணிப்பிரச்சினை வலுவடைந்ததில் ஒருவர் இன்னொருவரை தாக்கிக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபருக்கும் அவரது அயல் வீட்டுக்காரருக்கும் கடந்த மூன்று மாதங்களாக காணிப் பிரச்சினை இருந்துள்ளது.

இந்நிலையில், நேற்றுக்காலை அவருக்கும் அவரது அயல் வீட்டுக்காரர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அது பின்னர் கைகலப்பாக மாறியது. இதன்போது மரணமடைந்த நபரும் அவரது மகளும் அயல் வீட்டுக்காரர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மகளும் குறித்த நபரும் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு அயல் வீட்டில் உள்ளவர்களின் முச்சக்கரவண்டி மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ளவரின் வயல் காணியை சகோதரர்கள் இருவர் பராமரித்து வருகின்றனர். இன்றைய தினம் அந்தக் காணியில் மற்றொருவர் உள்ளதாக அறிந்த சகோதரர்கள் இருவரும் அங்கு சென்று முரண்பட்டதுடன் கம்பியாலும் தாக்கியுள்ளனர். தாக்குதலுக்குள்ளானவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மகள் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இராசநாயகம் ரெஜியானந்தன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிந்தவூர் பிரதேச செயலாளராக சட்டத்தரணி லத்தீப் கடமையேற்பு!



(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.எம். லத்தீப் நிந்தவூர் பிரதேச செயலாளராக நேற்று கடமையேற்றுக்கொண்டார்.

நிர்வாக சேவையில் பன்முக ஆளுமை கொண்ட சட்டத்தரணியும் கல்விமானுமாகிய ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதேச செயலாளராக கடமையேற்கும் நிகழ்வு நேற்று நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் உட்பட பிரதேச செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு புதிய பிரதேச செயலாளருக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,03,285 | 46,605 | 3,48,930 | 4,446 | 7,750 |

# கல்முனையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று

(கல்முனை)

கொரனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவுக்கு மேலும் 20 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முதலாவது தடுப்பூசி பெற தவறிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் முதன்மை அடிப்படையில் குறித்த தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது - என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

இந்நிலையில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முதலாவது தடுப்பூசி பெற்றுக்கொள்ளத் தவறிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இன்று காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மருதமுனை அல்-மனார் (ஆரம்பப் பிரிவு) வித்தியாலயம், கல்முனைக்குடி அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல் -அக்ஸா வித்தியாலயம் ஆகிய இடங்களில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக மேலும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 26ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஊடக அச்சுறுத்தல்கள் மீதான விசாரணைகள் நடக்கின்றனவா?

**ஊ**டகவியலாளர்களைக் கைதுசெய்தல் மற்றும் விசாரணைக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள ஊடகவியலாளரை பரிந்துரைக்கப்பட்ட சட்டவிதிகளுக்கு அமைவாக விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவரது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு கடந்த வாரம் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கோரிக்கை கடிதத்தை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

லங்கா ஈ நியூஸ் செய்தி வலைத்தளத்தில் ஊடகவியலாளராக கடமை புரியும் கீர்த்தி ரத்நாயக்க என்பவர் இந்திய தூதுவராலயத்துக்கு சில தகவல்களை பெற்றுக்கொடுத்ததாக குற்றஞ்சாட்டி அவரை 90 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின்பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்த இணையத்தளத்தின் ஆசிரியர் குழு எமக்கு அறியத்தந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள ஊடகவியலாளரை பரிந்துரைக்கப்பட்ட சட்ட விதிகளுக்கமைய விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவரது உயிருக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பாகிய நாம் முதலில் உங்களை வேண்டிக்கொள்கிறோம். அவர் கைதுசெய்யப்பட்ட குற்றச்சாட்டு தவிர்ந்த அவர் கடமைபுரியும் செய்தி இணையத்தளத்தின் தகவல்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைசெய்து வருவதுடன், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் ஈ நியூஸ் ஆசிரியர் குழு குறிப்பிட்டுள்ளது.

நீதித்துறை செயற்பாட்டில் ஏதேனும் ஒரு சம்பவம் தொடர்பில் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களைத் தவிர அவரிடம் காணப்படும் மற்ற மூலாதாரங்களை வெளிப்படுத்தாது அதன் இரகசியத் தன்மையைப் பேணுவதானது ஊடகவியலாளர்களின் பணிசார் பொறுப்பு மற்றும் ஊடகவியல் மரபு என்பதனை இத்தருணத்தில் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ஆகவே, கீர்த்தி ரத்நாயக்க சம்பவம் தொடர்பான அனைத்து உண்மைத் தகவல்களையும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதுடன், சட்ட ஏற்பாட்டு விதிமுறைகளுக்கமைவாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சமூக வலைத்தள ஆர்வலரான துஷாரா வன்னியாராச்சி என்பவரின் வீட்டை அதிகாலைவேளையில் பெருமளவான பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு சோதனை நடத்தியதாகக் கூறப்படுகின்றமை, 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தங்கியிருந்த வீட்டிற்குகள் சி.ஐ.டி. என தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் நுழைய முற்பட்ட சம்பவம், அதேபோன்று மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் விசாரிக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. மேலே குறிப்பிட்ட சமீபத்திய சம்பவங்களின் பின்னணி தெளிவாக இல்லை என்பதனால் இந்தச் சம்பவங்கள் தொடர்பான தெளிவான தகவல்களை சமூகத்துக்கு தெரியப்படுத்துவது இன்றியமையாததாக காணப்படுகிறது.

ஊடகவியலாளர்களை பயமுறுத்தும் விதத்தில் செயற்படுவதானது அவர்களின் ஊடக சுதந்திரத்தைத் தடுப்பதுடன், அவர்களின் ஊடகப் பணி நடவடிக்கைகளின் செயல்திறனை பாதிக்க வழிவகுக்கும் என்பதால் பரிந்துரைக்கப்பட்ட சட்ட ஏற்பாட்டு விதிகளுக்குள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துமாறும் ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படும் தருணங்களில் கைதுசெய்யப்பட்டதற்கான காரணத்தை சமூகமயமாக்குமாறும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு என்ற வகையில் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளபோதிலும் அவர்சார்பில் இதற்கு எந்தவொரு பதிலும் வழங்கப்படாமை கவலையளிக்கிறது.

சட்டம் யாவருக்கும் சமன் என்பது வெறும் வார்த்தைகளில் மாத்திரம்தானா என்ற கேள்வியும் எழுகிறது. அரசாங்கத்தின் பிற்போக்கான கொள்கைகளை விமர்சிக்கும், நியாயத்தின்பால் குரல்கொடுக்கும் ஊடகவியலாளர்களை ஒடுக்குவதற்கான செயற்பாடுகளின் ஓரங்கமா இது? அவ்வாறில்லையெனின் ஊடகவியலாளர்களுக்கு எதிரான மேற்கூறப்பட்ட பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கான காரணம் என்ன?

அவ்வாறு பொலிஸாரை யார் இயக்குகிறார்கள்? இயக்குபவர்களின் நோக்கம்தான் என்ன? விசாரணைகள் என்ற போர்வையில் இதுவரை உண்மைகள் ஏன் வெளிப்படுத்தப்படவில்லை? அதிகாரத்தில் உள்ளவர்களா? அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களின் துணையாட்களா?

விசாரணைக்குழு என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸாரும் அதற்குத் தலைமைதாங்கும் பொலிஸ் மா அதிபரும் இவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமெல்லவா? ஆகையால் பொலிஸ் மா அதிபர் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்படவேண்டியது அவசியமாகும். அப்போதுதான் பொலிஸார் மீது மக்கள் வைத்துள்ள சிறு நம்பிக்கையையும் தக்கவைத்துக்கொள்ள முடியும்.





# வல்லரசுகளை அச்சுறுத்தும் அமெரிக்கா குட்டி நாடுகளிடம் வீழ்ந்தது









**ஆ**ப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் பின்வாங்கியதைப் பார்த்து இன்றைய தலைமுறையினர் வியப்புடன் நோக்குகின்றனர். உலகின் நாட்டாமையான அமெரிக்காவுக்கு இது தலைகுனிவு என்ற விமர்சனம் பரவலாக வைக்கப்பட்டுள்ளது. கியூபா, வியட்நாம் ஆகியவற்றை ஆக்கிரமிக்க முயன்ற அமெரிக்கா, அங்கிருந்து தோல்வியுடன் தலைகுனிந்து வெளியேறியது வரலாறு.

உலக வரைபடத்தில் புள்ளி அளவிற்கு கூட கியூபா, வியட்நாம், ஆப்கானிஸ்தான் என்று அடுத்தடுத்து மூன்று குட்டி தேசங்களிடம் அமெரிக்கா தோல்வியடைந்து சர்வதேச அளவில் தலைகுனிவை சந்தித்துள்ளது. உலக அரசியலில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட தோல்விகளில் இவையும் அடக்கம்.

அமெரிக்காவுக்கு அருகே ஒரு புள்ளிபோல் இருப்பது கியூபா. கியூபாவை ஸ்பெயின் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெறுவதற்காக 1800களில் கியூபா மக்கள் போராடினார்கள். இரண்டு போர்கள் முடிந்தும் கியூபாவால் விடுதலைபெற முடியவில்லை. இரண்டாவது போரின்போது அண்டைநாடான அமெரிக்கா உதவும் என கியூபா எதிர்பார்த்தது.

மூன்றாவது விடுதலைப் போர் ஆரம்பமாகியது. ஸ்பெயினுக்கு அடிமையாக இருக்கும் கியூபாவுக்கு விடுதலை வாங்கிக்கொடுக்க வேண்டும் என்ற கருத்து அமெரிக்காவில் ஓங்கி ஒலித்தது. அமெரிக்கா தனது நாட்டுமக்களை அடிமையாக வைத்திருந்த காலம் அது. கறுப்பின மக்களும் அமெரிக்க பூர்வ குடிமக்களும் போராட்டம் நடத்திய காலம். கியூபா போரில் தலையிட வேண்டும் என்று அமெரிக்காவில் 'அடிமை வாதத்தை' ஆதரிக்கும் கட்சிகள் கோரிக்கை வைத்தன.

கியூபா விடுதலைப் போரில் அமெரிக்கா களமிறங்கியது. ஸ்பெயினுக்கு எதிரான கியூபாவின் சுதந்திரப் போரில் அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் போரிட்டு கியூபாவிற்கு உதவியது. 1895 – 1898வரை நடந்த இந்தப் போரில் அமெரிக்காவின் உதவியுடன் கியூபா என்ற சுதந்திர தேசம் பிறந்தது. பெயரளவில் சுதந்திர நாடான கியூபாவில் அமெரிக்காவின் சொல்லைக் கேட்கும் பொம்மை ஆட்சி ஆரம்பமாகியது.

கியூபா சுதந்திர நாடாகியதும் அங்கிருந்து வெளியேறுவதாக வாக்களித்த அமெரிக்கா, தனது வாக்குறுதியை மீறி அங்கு நிலைகொண்டது. அமெரிக்காவின் தலையீட்டால் கியூபாவில் வறுமையும் ஊழலும் தலைவிரித்தாடின. கியூபாவின் கரும்பு ஆலைகளை அமெரிக்கா மறைமுகமாக கட்டுப்படுத்தியது. கியூபாவின் ஜனாதிபதி படிஸ்டாவின் ஆட்சியில் ஊழல் தலைவிரித்தாடியது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக கியூபா மக்கள் போராடினார்கள். கியூபாவின் புரட்சிக்கு பிடல் கஸ்ரோ தலைமை வகித்தார். பிடல் கஸ்ரோ தலைமையில் 1953ஆம் ஆண்டு கியூபாவில் புரட்சி போராட்டம் வெடித்தது. ஐந்து வருடங்கள் நடந்த போராட்டத்தின் முடிவில் 1958 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பிடல் கஸ்ரோ கியூபாவில் செங்கொடி ஏற்றினார். அமெரிக்காவின் மூக்கிற்கு கீழேயே கம்யூனிச நாடொன்று பிறந்தது. கம்யூனிச கொள்கைகொண்ட போராளிகளிடம் தோல்வியடைந்ததை – அதிலும், கொரில்லா போராளிகளிடம் தோல்வியடைந்ததை அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

இரண்டாவது உலகப்போர் முடிந்த பின்னர் உலக அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. கைப்பற்றிய நாடுகளிலிருந்து படைகள் வெளியேறின. வியட்நாமில் நிலைகொண்டிருந்த ஜப்பானிய படைகள் தாய் நாட்டுக்குச் சென்றன. வியட்நாமில் தங்கியிருந்த ஸ்பெயினின் ஆதிக்கம் தொடர்ந்தது.

வியட்நாமின் வடக்கு பகுதியை கம்யூனிச சித்தாந்தம்கொண்ட ஹோ சி மின், பிரான்ஸ் ஆதிக்கத்திற்கு எதிராக போராடி கைப்பற்றினார். இதனால் வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் என்ற மோதல் தீவிரமாக நடந்துவந்தது. பிரான்ஸ் ஆதிக்கத்திற்கும் ஹோ சிமின்னின் கம்யூனிச போராளிகளுக்கும் இடையில் மோதல் நடந்து வந்தது. இந்நிலையில், பெரியண்ணனான அமெரிக்கா பஞ்சாயம் செய்ய களமிறங்கினார்.


முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் தெற்கு வியட்நாமையும் பிரான்ஸ் ஆதிக்கத்தையும் ஆதரித்தன. ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் வடக்கு வியட்நாமை ஆதரித்தன. பனிப்போர் சமயம் என்பதால் வியட்நாம் போர் ஒரு துணைப்போர்போல் நடந்து வந்தது. இது மூன்றாம் உலகப்போரை ஏற்படுத்துமோ என்ற அச்சமும் நிலவி வந்தது. பல இலட்சம் குண்டுகள், விமானங்கள், வீரர்கள் என்று நவீனமான போரை வடக்கு வியட்நாம் மீது அமெரிக்கா ஏவியது. ஆனால், வடக்கு வியட்நாம் போராளிகளோ காடுகளில் மறைந்திருந்து பதிலடி கொடுத்தனர்.


காடுகளில் கொரில்லா தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் அமெரிக்கா 1973இல் வெளியேறியது. 1975இல் வடக்கு வியட்நாம் இந்தப் போரில் பிரான்ஸை வீழ்த்தி வென்றது. அவதார் படம் போன்று அன்றைய வியட்நாம் போராளிகள் அமெரிக்காவுக்கும் பிரான்ஸுக்கும் எதிராகப் போராடி வெற்றி பெற்றார்கள். மொத்தமாக போரில் கம்யூனிச நாடுகள் வென்றதாக அறிவிக்கப்பட்டதோடு, வடக்கு – தெற்கு வியட்நாம் இணைந்து வியட்நாம் என்ற கம்யூனிச நாடு பிறந்தது. கியூபாவில் தோல்வி, வியட்நாமில் தோல்வி என்று அமெரிக்கா நிலைகுலைந்துபோனது. வியட்நாம் தோல்வியானது அமெரிக்கப் படை வீரர்களுக்கு மன ரீதியான பாதிப்புகளை ஸ்கிட்ஸோபெர்னியா போன்ற அதீத மனநல பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

ஈராக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து குவைத்தை விடுவித்தது, ஈரானின் போரில் வெற்றிபெற்றது போன்று ஆப்கானையும் கைப்பற்ற நினைத்த அமெரிக்கா 20 வருடங்களின் பின்னர் அங்கிருந்து தோல்வியுடன் வெளியேறியது. 1980களின் தொடக்கத்தில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆப்கானில் முகாஜிதீன்கள் போராடினார்கள். அப்போது அவர்களுக்கு அமெரிக்கா உதவியது.

அமெரிக்காவை நம்பி இனி களமிறங்கக்கூடாது, போராடக்கூடாது என்ற நிலைமையை உலக நாடுகளுக்கு இந்தத் தோல்விகள் எடுத்துரைத்துள்ளன. அமெரிக்காவை பெரிதும் நம்பிய ஆப்கான் அரசை அமெரிக்கா கைவிட்டது. அமெரிக்க நட்பு நாடுகளுக்கும் நேட்டோ படைகளுக்கும் மிகப்பெரிய எச்சரிக்கையாக மாறியுள்ளது.

**ரமணி**







# தங்கச்சங்கிலியை திருடிய சம்பவத்தில் கைதான இருவருக்கு விளக்கமறியல்



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு - கல்குடா விநாயகபுரம் பிரதேசத்தில் 14 வயதுடைய சிறுமியின் தங்கச்சங்கிலியைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரும் இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன விதானகே தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விநாயகபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி தனியாக மளிகைக்கடைக்குச் சென்று திரும்பும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த 22 வயதுடைய வாலிபர் சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அபகரித்துச்சென்ற சம்பவம் அப்பகுதி வர்த்தக நிலையமொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியிருந்தது.

அதனை அடிப்படையாகக்கொண்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அந்தச் சங்கிலியை விற்பனை செய்வதற்கு வாழைச்சேனை மீன்பிடி துறைமுகப்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டிருந்தமை அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதையடுத்து அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ வீரர் மேலும் பல குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவரென தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்னார் பொது வைத்தியசாலை பணியாளர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவைக் கோரி போராட்டம்





(மன்னார் நகர் நிருபர்)

நீண்ட நாட்களாக வழங்கப்படாத மேலதிக நேரக் கொடுப்பனவை விரைவில் வழங்கக் கோரி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள் நேற்று புதன்கிழமை அடையாள பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த மாதமும் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில், தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படாதையும் கொரோனா காலப்பகுதியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் தங்களுக்கு உரியநேரத்தில் மேலதிக நேர கொடுப்பனவு கிடைக்கப்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி நேற்று இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக, கடந்த வருடத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவே நீண்ட இழுபறியின் பின்னர் கிடைக்கப்பெற்றதாகவும் இவ்வருடத்தில் பல மாதங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, விரைவில் மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக நேரக் கொடுப்பனவுகள் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும் பட்சத்தில் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொள்வதைத் தவிர, தங்களால் வேறெதுவும் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஜேர்மனி - குவைட் தூதுவர்கள் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துப் பேச்சு





ஜேர்மனி தூதுவர் ஹோல்கர் லோதர் சியூபர்ட் மற்றும் குவைட் தூதுவர் கலஃப் புதைர் ஆகியோர் நேற்று முன்தினம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இந்தக் கலந்துரையாடல்கள் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தன.

அதற்கமைய, ஜேர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தூதுவர் ஹோல்கர் லோதர் சியூபர்ட் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அமைச்சில் வைத்து இலங்கையின் புதிய வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, அரசியல், பொருளாதார உறவுகள் முதல் நீண்டகால கலாசாரத் தொடர்புகள் மற்றும் மக்களுக் கிடையிலான தொடர்புகள் வரை இலங்கை - ஜேர்மனி இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் பன்முகத்தன்மையை வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உற்பத்தி ஒத்துழைப்பை தூதுவர் சியூபர்ட் எடுத்துரைத்தார். இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையில் சமீபத்தில் முடிவடைந்த அரசியல் ஆலோசனைகளின் வெற்றியை அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் புகழ்பெற்ற ஜேர்மன் நிறுவனங்களின் வலுவான இருப்பைக் குறிப்பிட்ட வெளிநாட்டு அமைச்சர், பரஸ்பரம் நன்மைக்காக இலங்கையில் முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக ஜேர்மனிக்கு அழைப்பு விடுத்தார். ஜேர்மனியின் உதவியுடன் கட்டப்பட்ட காலியிலுள்ள மஹமோதர மகப்பேறு மருத்துவமனை (ஹெல்முட் கொஹ்ல் மருத்துவமனை) குறித்து தூதுவர் சியூபர்ட் வெளிநாட்டு அமைச்சரிடம் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் இலங்கைக்கான குவைத் தூதுவர் கலஃப் புதைர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தூதுவர் தனது தொடக்க உரையில், குவைத் வெளிநாட்டு அமைச்சர் ஷேக் கலாநிதி அஹமத் நாசர் அல்-அஹமத் அல்-சபாவிடமிருந்தான வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இலங்கை அரசாங்கத்துடன் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான குவைத் அரசாங்கத்தின் விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்புகளில் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மோரா தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு பூட்டு



(நோட்டன் பிரிட்ஜ்)

பொகவந்தலாவை, மோரா தோட்டப் பகுதியில் இயங்கிவந்த கொரோனா தனிமைப்படுத்தல் மத்திய நிலையம் மூடப்பட்டுள்ளது.

குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த கொரோனா நோயாளர்கள் நேற்று முன்தினம் இரவு நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர் .

மோரா தோட்டத்திலுள்ள தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் ஒரே தடவையில் 148 நோயாளர்கள் அனுமதிக்கக்கூடிய வகையில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆரோகணா மெய்நிகர் பாடல் போட்டி

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் ஆரோகணா மெய்நிகர் பாடல் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

ஆரோகணா என்ற பெயரில் நடத்தப்படும் இந்தப் பாடல் போட்டியில் நாடு முழுவதிலுமுள்ள 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட சகலரும் பங்குபற்ற முடியும்.

போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் பாடல் தமிழ் பாடலாக இருக்கவேண்டும். பதிவுகளுக்கான இறுதித் திகதி இன்று (26ஆம் திகதி) ஆகும்.

www.aarohana.live என்ற இணைய முகவரியில் பதிவிடலாம். பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 0762785039 என்ற இலக்கத்துக்கு அழைக்க முடியும்.

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட 3ஆயிரம் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

(கிண்ணியா நிருபர்)

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை மற்றும் கந்தளாய் பிரதேசங்களில் இடம்பெற்றது

ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பன் நிறுவனத்தின் அனுசரணையோடு இடம்பெற்ற இந்நிகழ்வை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் அந்த மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள, கந்தளாய் பிரதேச செயலாளர், முஸ்லிம் ஜேர்மன் ஹல்பன் நிறுவனத்தின் தலைவர் சாதிக் ஹசன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# கண்டி தேசிய வைத்தியசாலைக்கு சவப்பெட்டிகள் வழங்கிவைப்பு



(இக்பால் அலி)

கண்டி தேசிய வைத்தியசாலையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை மிகத் துரிதமாக அதிகரித்து வருகிறது.

அதன் காரணமாக பிரேத அறையில் நிலவும் இடப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதன் நோக்கில் கண்டி தேசிய வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் மொஹான் சமரகோனினால் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை தேசிய தலைவர் அல்ஹாஜ் ரிஸ்மி ஷஹீத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஒரு தொகை சவப்பெட்டிகள் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்படடுள்ளன.

தலைவர் சஹீட் எம். ரிஷ்மியினால் கண்டி தேசிய வைத்தியசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவரும் கண்டி ஜனாஸா சங்க உறுப்பினருமான ஜனாப் எஸ்.எம்.ரிஸ்வியிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு கண்டி வை.எம். எம். ஏ. பணிப்பாளர் பவ்ஸ் ஏ காதர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டதை இங்கு படங்களில் காணலாம்.

# கிண்ணியா பிரதேச சபையின் ஊழியர்கள் சிலருக்கு தொற்று

## நாளாந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(திருகோணமலை)

கிண்ணியா பிரதேச சபையில் கடமையாற்றும் சில ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனால் சில தினங்களுக்கு சபையின் நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, மறு அறிவித்தல்வரை சபையின் சேவையை நாடி பொதுமக்கள் யாரும் வரவேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தங்களுடைய வீடுகளில் சேர்த்து வைக்கப்படுகின்ற வீட்டுக்கழிவுகளை சுயமாகவே அகற்றி சுத்தத்தைப் பேணுமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பலாங்கொடையில் மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது!



(பலாங்கொடை)

நாடு முழுவதும் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில், அதிக விலையில் விற்பனை செய்வதற்காக கொண்டுசெல்லப்பட்ட மதுபான போத்தல்களுடன் ஒருவரை நேற்று முன்தினம் பலாங்கொடை பொலிஸ் நிலைய அதிகாரியால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பொலிஸ் அதிகாரிகள் பலாங்கொடை நகரத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றை சோதனையிட்டபோது வியாபார நிலையமொன்றில் மேல் மாடியில் மறைத்துவைத்திருந்த மதுபான போத்தல்களுடன் ஒருவரை கைதுசெய்துள்ளார்கள்.

750 மில்லிலீற்றர் சாராயப் போத்தல்கள் 12, 180 மில்லி லீற்றர் சாராயப் போத்தல்கள் 13, பியர் போத்தல்கள் 37 என்பன சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

# வவுணதீவில் சட்டவிரோதமாக மண் ஏற்றிச்சென்ற இருவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேசத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களுடன் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிஷாந்த ஹப்புகாமியின் ஆலோசனையின்படி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக வவுணதீவு கரடிப்பூவல் பகுதியில் ஊரடங்கு காலத்தைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி லோடர் (பெக்கோ) வாகனத்தினால் கெண்டர் ரக வாகனத்தில் மண் ஏற்றுகையில் அதிலிருந்த இருவரையும் தாம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இச்சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# 11 வயது சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேகநபரான பிக்கு கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைக்குடா விகாரையில் பிக்குவாக கல்வி கற்றுவந்த 11 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த விகாரையின் பிரதம பிக்கு ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் இதுதொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அதனடிப்படையிலேயே பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த சிறுவன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் கைதுசெய்த பிக்குவை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மங்கள சமரவீரவின் மறைவுக்கு அரசியல்பிரமுகர்களின்இரங்கல்

## “இலங்கை – உலகம் குறித்த உங்கள் விதிவிலக்கான பார்வை இன்னும் வாழ்கிறது”



### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

‘‘மங்கள நீங்கள் இறக்கவில்லை. இலங்கை மற்றும் உலகம் குறித்த உங்கள் விதிவிலக்கான பார்வை இன்னும் வாழ்கிறது. நாங்கள் நடத்திய போராட்டங்கள் என்றென்றும் உயிர்ப்புடன் இருக்கும்’’ - என மங்கள சமரவீரவின் மரணம் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உருக்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

என் அன்பு நண்பர், சகோதரர், தோழர் மங்களா! இந்த இருண்ட நாளில் வாழ்வதற்கான போரில் நீங்கள் தோற்றுவிட்டீர்கள்.

உங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் உங்களை காப்பாற்றப் போரிட்டனர். அழுது அழுது பிரார்த்தனை செய்தனர். ஆனால், இந்தப் போரில் நாங்களும் தோற்றுவிட்டோம்.

நீங்கள் இறக்கவில்லை மங்கள! இலங்கை மற்றும் உலகம் குறித்த உங்கள் விதிவிலக்கான பார்வை வாழ்கிறது. நாங்கள் நடத்திய போர் என்றென்றும் உயிர்ப்புடன் இருக்கும்.

அன்புள்ள மங்கள! சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்பும் ஒவ்வொரு போரிலும் நீங்கள் வாழ்வீர்கள். சுதந்திரம் கொண்ட - நேர்மையான ஆட்சி செய்யும், பன்முகத்தன்மையை மதிக்கும் ஒரு நாடு எப்போதும் உச்சத்தில் இருக்கும். ஒரு நல்ல நாடும் நல்ல அரசாங்கமும் எப்போதும் அந்த நாட்டு மக்களின் நலன்கள் குறித்தே கவனம் செலுத்தும். மாறாக அரசியல்வாதிகள் குறித்தல்ல.

நீங்கள் அனைத்திற்கும் உருவகமாக இருந்தீர்கள். அநீதி மற்றும் ஊழலுக்கு எதிராக நிற்கும் அனைவரின் இதயங்களிலும் செயற்பாடுகளிலும் நீங்கள் வாழ்வீர்கள்.

பல்வேறு அமைச்சுப் பதவிகளை ஏற்று நீங்கள் செய்த மகத்தான சேவையை நான் எப்போதும் நினைவில் கொள்வேன். எங்கள் தகவல் தொடர்பு மற்றும் ஊடகத் துறைகளின் நவீனமயமாக்கலுக்கு நீங்கள் தலைமை தாங்கினீர்கள். சர்வதேச அளவில் மோசமான நிலையில் இருந்த இலங்கை குறித்த நிலைப்பாட்டை நீங்கள் மாற்றினீர்கள். மீண்டும் பெருமை மற்றும் வலிமையான தேசமாக எமது நாட்டை மாற்றினீர்கள். எனினும், உங்களின் நெறிமுறை சார்ந்த அரசியல் இலங்கை அரசியல் அரங்கில் ஒத்துப்போவது கடினமாகவே இருந்தது.

இனி வரும் தலைமுறைகளுக்கு - எங்கள் இளைஞர்களுக்கு நீங்கள் எப்போதும் ஊக்கமளிப்பீர்கள்.

அன்புள்ள நண்பரே, ஓய்வில் இருங்கள் - என்றுள்ளது.

## நற்பண்புகளைக்கொண்ட மங்களவின் இழப்பு வேதனையளிக்கிறது

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



கொவிட் பேரவலத்தினால் நாட்டில் நாள்தோறும் ஏற்படுகின்ற நூற்றுக்கணக்கான உயிரிழப்புகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் உயிரிழந்துள்ளார் என்ற செய்தி அறியக் கிடைத்துள்ளது. அரசியல் நிலைப்பாடுகளுக்கப்பால் நற்பண்புகளைக்கொண்ட ஒருவரான மங்கள சமரவீரவின் இழப்பு எமக்கு வேதனையை ஏற்படுத்தியிருக்கின்றது - என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அன்னாரின் இழப்பு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சக நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரவையில் இணைந்து செயற்பட்ட காலத்திலும் அமரர் மங்கள சமரவீர இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்டிருந்தார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கின்ற அவரின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், காலம் தாமதிக்காமல் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமும், அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்படுகின்ற சமூக பாதுகாப்பு ஒழுங்குகளை இறுக்கமாக பின்பற்றுவதன் மூலமும் எதிர்கொண்டுள்ள பேரவலத்திலிருந்து நாட்டை பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன் – என்றுள்ளது.



## போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சுப் பதவியை இழந்தவர் மங்கள

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

சிங்கள அரசியல்வாதிகளுக்குள் மற்றைய சமூகங்களின் நண்பன் மங்கள சமரவீரவைபோல் வேறு எவரும் கிடையாது - என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

எமது நெருங்கிய நண்பரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர நேற்று முன்தினம் கொரோனா தொற்றினால் உயிர்நீத்தார். சிங்கள அரசியல்வாதிகளுக்குள் மற்றைய சமூகங்களின் நண்பன் இவரைபோல் வேறு எவரும் கிடையாது.

விடுதலைப் புலிகளினுடனான போர் நடத்தப்பட்ட முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் தனது அமைச்சுப் பதவியை இழந்தவர். பின்னர் அதே பதவியை திரும்பப் பெற்றபோது இலங்கையில் நீதிக்காகவும் பொறுப்புக்கூறலுக்காகவும் நல்லிணக்கத்திற்காகவும் அயராது பாடுபட்டவர்.

நிதி அமைச்சராக வல்வெட்டித்துறையில் குமார் ஆனந்தன் நினைவாக நீச்சல் தடாகம் ஒன்றை திறந்துவைப்பதற்காக வருகைதந்திருந்த நாளை நினைவுப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

## முஸ்லிம் சமூகத்திற்காக குரல் கொடுத்த ஒரு சகோதரர் மங்கள



### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா

(சீனாக்குடா நிருபர்)

அரசியலில் மிகப் பெரிய பங்கை வகித்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மங்கள சமரவீர இலங்கையின் தென்பகுதியிலிருந்து அரசியலுக்குள் நுழைந்து மிகவும் நேர்மையாக அரசியலை செய்த ஒருவர். அவரது அமைச்சில் தபால் தொலைத்தொடர்பு, ஊடகத்துறை பிரதி அமைச்சராக சுமார் 6 வருடங்கள் கடமையாற்றியுள்ளதோடு, அவரின் கீழ் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவராகவும் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளேன். மிகவும் இனிமையான சுபாவமும், எச்சந்தர்ப்பத்திலும் இலஞ்சம், ஊழல் போன்றவற்றிற்கு துணைபோகாத ஒருவராக வும் செயற்பட்டவர்.

அரசியலில் மிக நேர்மையாக செயற்பட வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பான ஒருவர். அரசியலில் மிக மோசமான, பிழையான நிலைமைகள் வருகின்றபோது கட்சிகளை விட்டு வேறு கட்சிக்கு மாறிய ஒருவர்.

முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகளின் கடுமையான செயற்பாடுகளின்போது அதற்கு எதிராக மாத்தறையில் முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்து முஸ்லிம் சமூகத்திற்காக குரல் கொடுத்த ஒரு சகோதரர். அது மாத்திரமன்றி தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களுக்கு யுத்த காலத்திலே ஏற்பட்ட இழப்புக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்த ஒருவர். ஐக்கிய நாடுகள் சபையில் கூட சிறுபான்மை இனங்கள் பாதிக்கப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதில் அவர் ஆற்றிய உரையினால் தென்னிலங்கையில் சர்ச்சைக்குள்ளாகிய ஓர் அமைச்சர். சிறுபான்மை இனங்களை அரவணைத்துக்கொண்டே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் மிகவும் கரிசனையான ஒருவர்

1989ஆம் ஆண்டு என்னோடு நாடாளுமன்றத்திற்கு எதிர்க்கட்சியிலிருந்து 1994ஆம் ஆண்டு ஆட்சியமைத்ததுமுதல் பொதுஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியில் மிகக் கடுமையான பங்களிப்புகளைச் செய்த ஒருவர். எதிர்காலத்தில் அரசியலில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இரவு பகலாக செயற்பட்டுக்கொண்டிருக்கும்போது இவ்வாறான மரணம் ஏற்பட்டிருக்கின்றது. அவரது குடும்பம், நண்பர்களோடு பழகிய ஒருவன் என்ற அடிப்படையில் மிகவும் ஆழ்ந்த கவலையடைகின்றேன். இவ்வாறான தலைமைகளை இந்நாடு இக்காலகட்டத்தில் இழந்தது மிகவும் துரதிஷ்டமானது. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன் - என குறிப்பிட்டுள்ளார்.



## மங்கள சமரவீர என்பது வெறும் பெயரல்ல!

### ஹாரீஸ் எம்.பி. உருக்கம் !

(மாலிகைக்காடு நிருபர்)

மங்கள சமரவீர என்பது வெறும் பெயரல்ல. இலங்கையின் வரலாற்று அடையாளம் எனும் புகழுக்குரியவர். இன்று எங்களை விட்டு மறைந்த செய்தி பேரதிர்ச்சியாக உள்ளது - என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹாரீஸ் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை அரசியலில் தவிர்க்கமுடியாத ஆளுமையாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட தேசிய தலைமைகளின் ஒருவரான மங்கள சமரவீரவின் இழப்பு இலங்கைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இலங்கைக்கு தலைமைத்துவம் கொடுக்கும் அளவுக்கு திறமையும் துணிச்சலும் கொண்ட தேசிய தலைமைகளின் ஒருவராக தன்னை நிலைநிறுத்தியவரே மறைந்த மங்கள சமரவீர.

எமது நாட்டின் மிக முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து எமது நாட்டின் பொருளாதாரம், சமூக மேம்பாடு, சர்வதேச உறவுகள் வலுப்பெற பல்வேறு வகைகளிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார். சிறந்த தூரநோக்கு சிந்தனைகொண்ட மாறுபட்ட வினைத்திறன்மிக்க திட்டங்களை வகுத்து நாட்டை முன்னேற்ற துடித்த ஒரு தலைமைத்துவத்தை இன்று கொரோனா காவுகொண்டுள்ளமை வருத்தமளிக்கிறது.

கடந்த 2001ஆம் ஆண்டுமுதல் என்னுடைய நாடாளுமன்ற காலத்தில் நல்ல நட்புறவுடன் என்னுடன் உறவாடி பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கிய பொழுதுகளை எண்ணிப்பார்க்கிறேன். அதிலும் குறிப்பாக, கடந்த அரசில் நிதியமைச்சராக அவர் பதவிவகித்த காலப்பகுதியில் பிராந்திய அபிவிருத்திகளுக்கும், சந்தாங்கேணி மைதான அபிவிருத்திக்கும் நேரடியாக நிதியொதுக்கி தந்திருந்தார். அவரது இழப்பினால் துயருற்ற அவரது குடும்பத்தினர், நண்பர்கள், ஆதரவாளர்கள் எல்லோருக்கும் என்னுடைய ஆழ்ந்த கவலைகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

## இனத்துவேஷமின்றி அனைவரும் சமத்துவத்துடன் வாழவேண்டுமென்பதில் அக்கறை செலுத்தியவர் மங்கள



### ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உண்மையான ஜனநாயகவாதி. அவரை இலங்கை திடீரென இழந்துவிட்டது. இந்த நாட்டுக்கு அவர் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றபோது அவரை கொரோனா காவுகொண்டது இலங்கைக்குப் பேரிழப்பாகும்.

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மங்கள சமரவீரவும் நானும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் பிறந்து ஒரே காலத்தில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள். அன்றிலிருந்து இன்றுவரை நெருக்கமான உறவுகளைப் பேணுவதிலும் நட்பு பாராட்டுவதிலும் இருவரும் உளத்தூய்மையுடன் செயற்பட்டு வந்தோம்.


மங்கள சமரவீர சிங்கள மேலாதிக்க கடும்போக்காளர்கள் மத்தியில் ஒரு மானுடனாக சகல இன மக்களைப் பற்றிச் சிந்தித்தவர். அன்னாரின் தந்தை ஓர் இடதுசாரி சிந்தனை உடையவர் என்பதால் மங்கள சமரவீரவும் இனத்துவேஷமின்றி, இலங்கை ஒரு பல்லின மக்கள் வசிக்கும் நாடு என்பதை ஏற்று அனைவரும் சமத்துவத்துடன் வாழ வேண்டுமென்பதில் அக்கறை செலுத்தி அதற்காக கடினமாக உழைத்து வந்தார்.

பெரும்பான்மையான சிங்கள மக்கள் வாழ்கின்ற மாத்தறை நாடாளுமன்றத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்தபோதிலும் இனவேறுபாடின்றி தமது கடமைகளை முன்னெடுத்திருந்தார்.

பழகுவதற்கு இனியவர்; ஒரு நேர்மையான அரசியல்வாதி. இந்த நாட்டுக்கு அவர் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றபோது அவரைக் கொரோனா காவுகொண்டது இலங்கைக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், அரசியல் நண்பர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

## அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



### இராஜாங்க அமைச்சர் ஜீவன்

(தலவாக்கலை நிருபர்)

ஐக்கிய தேசிய கட்சியின் நீண்டநாள் உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான மங்கள சமரவீரவின் இழப்பு அதிர்ச்சியை தந்துள்ளது - என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளர்.

அமரர் மங்கள சமரவீரவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் ஜீவன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, கொழும்பில் தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் மங்கள சமரவீர உயிரிழந்தார். இவரின் இழப்பு பேரிழப்பாகும். கடந்த அரசாங்கத்தில் நிதியமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் பல முக்கிய பதவியை வகித்த இவர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் இணைந்து பயணித்தவராவார்.

இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் நல்ல நண்பராவார். 1983ஆம் ஆண்டு காலத்தில் அரசியலில் பிரவேசித்த அமரர் மங்கள சமரவீர, இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் மலையக பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திகளுக்கும் ஆதரவு வழங்கியிருந்தார். அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது

## மங்களவின் சாதனைகளும் சாமர்த்தியங்களும் அளப்பரியன



### நாடாளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா

(ஒலுவில் நிருபர் )

இலங்கை அரசியல் வரலாற்றில் ஆழமாய் தடம் பதித்த ஜாம்பவான் மங்கள சமரவீரவின் மறைவுச் செய்தி பேரிடியாகவும், நாட்டுக்கு பேரிழப்பாகவும் இருக்கின்றது - என தேசிய காங்கிரஸ் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மரணம் தொடர்பாக அனுதாபம் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமரர் மங்கள சமரவீரவோடு ஒன்றாயிருந்த அரசியல் காலங்களில் அவரின் சாதனைகள், சாமர்த்தியங்கள் அளப்பரியன. அளவிட முடியாதவை. அவருடன் அரசியலில் நண்பனாக நட்புடன் கலந்திருந்த காலங்களையும், அவரின் சாமர்த்தியத்தால் உருவாக்கப்பட்ட நாட்டின் தலைமைகளையும் நினைக்கிறேன். இனம், மதம் கடந்து ஒரு பொது விரும்பியாக அரசியலில் சாதனைப் படைத்த அவரின் மறைவால் துயருறும் எல்லோருடனும் நானும் இணைந்துகொள்கின்றேன் - என்றுள்ளது.

# தலீபான்களின் தலைவரை சந்தித்தாரா அமெ. உளவுப் பிரிவு பணிப்பாளர்?

## கசிந்தது இரகசிய தகவல்



அமெரிக்க உளவுப் பிரிவின் பணிப்பாளர் வில்லியம் ஜே பர்ன்ஸ் ஆப்கான் சென்று தலிபான் தலைவரை இரகசியமாக சந்தித்து பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானில் இருந்து அமெரிக்க இராணுவம் இம்மாத இறுதிக்குள் வெளியேற வேண்டும். அத்துடன், அங்குள்ள ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் மற்றும் நேச நாட்டு படையினரையும் அழைத்துச் செல்ல வேண்டும். இந்தக் கெடு முடிய சில நாட்களே உள்ள நிலையில், அனைவரையும் வெளியேற்றும் வரை ஆப்கானில் அமெரிக்க இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டும் என, பிரிட்டன் உள்ளிட்ட நேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மேலும் ஓகஸ்ட் 31 ஆம்திகதிவரை அமெரிக்கப் படையினர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அமெரிக்கா உறுதி அளித்தபடி வெளியேறாவிட்டால் நிலைமை விபரீதமாகும் என, தலிபான் அமைப்பு எச்சரித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவுப்படி உளவுத் துறை பணிப்பாளர் வில்லியம் ஜே பர்ன்ஸ் இரகசியமாக ஆப்கன் சென்று, தலிபான் தலைவரைச் சந்தித்து பேசியதாக, அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருவரும் பேசிய விபரங்கள் வெளியாகவில்லை. எனினும் அமெரிக்க இராணுவம் காபூல் விமான நிலையத்தில் உள்ளோர் அனைவரையும் வெளியேற்றும் வரை இன்னும் சில காலம் தங்கியிருப்பது குறித்து, இருவரும் விவாதித்திருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

இது குறித்து அடுத்த சில நாட்களில் அதிகார பூர்வ தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்த அமெரிக்க அழகி விக்டோரியா



பெச்சுலர் ஒப் பெரடைஸ் என்ற அமெரிக்காவின் மிகப் பிரபலமான தொலைக்காட்சித் தொடரில் நடித்துவந்த விக்டோரியா போல் சமீபத்தில் தெரிவித்த கருத்து சர்ச்சைக்குள்ளானது.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பிலான தகவல் பறிமாற்றங்களை நிறுத்துமாறு அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட ஊடகங்கள், அவருடைய காதல் வாழ்க்கையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக ஊகங்களை வெளியிடத் தொடங்கின.

இதன் பின்னணியில் பெச்சுலர் ஒப் பெரடைஸ் தொடரிலிருந்து அவர் விலகுவதாக அறிவித்துள்ளார். எனினும் அவர் விலகுவதற்கான உண்மையான காரணத்தை வெளிப்படுத்தவில்லை.

தொலைக்காட்சித் தொடரின்போது முக்கியமான நபர் ஒருவர் தன்னிடம் காதலை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்துள்ள விக்டோரியா போல், தான் தனிவழியில் செல்ல வேண்டுமென விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அழகியாக தெரிவு செய்யப்பட்ட விக்டோரியா, அந்நாட்டின் நட்சத்திரமாக வலம் வருகிறார். சமூக வலைத் தளங்களில் அவருக்கு ஆதரவாக பெரும் எண்ணிக்கையிலானோர் கருத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 9 சதவீதமானோர் மாத்திரமே இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்

## மருத்துவத்துறை அறிக்கை



தமிழகத்தில் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்தினர் மட்டுமே இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டுள்ளனர். முதல் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் 16 இலட்சம் பேர், இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில், கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் 18 வயதுக்கும் மேற்பட்ட 6 கோடியே 60 லட்சம் பேரில் 2 கோடியே 15 இலட்சம் பேர் முதல் கட்ட தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர். அவர்களில் 53 இலட்சத்து 50 ஆயிரம் பேர் மட்டுமே இரண்டாவது தவணை செலுத்திக் கொண்டுள்ளனர். அதாவது, ஒட்டுமொத்த மக்கள்n தாகையில் 9 சதவீதம் பேர் மட்டுமே இரண்டு தவணை தடுப்பூசியையும் செலுத்திக் கொண்டுள்ளனர்.

பதினாறு இலட்சத்து 12 ஆயிரத்து 623 பேர் உரிய நேரத்தில் இரண்டாவது தவணை தடுப்பூசியை செலுத்திக் கொள்ளவில்லை. இவர்களில் 28 நாட்களுக்கும் மேலாக இரண்டாவது தவணை தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் எண்ணிக்கை 5 இலட்சத்து 64 ஆயிரத்து 48 ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 84 நாட்களுக்குப் பிறகும், 10 இலட்சத்து 48 ஆயிரத்து 575 பேர் இரண்டாவது தவணை கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்று மருத்துவத் துறை தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக, சென்னையில் இரண்டு இலட்சத்து 97 ஆயிரத்து 521 பேர் இரண்டாவது தவணை ததடுப்பூசியை தவறவிட்டுள்ளனர். கோவையில் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 794 பேரும், திருச்சியில் 55 ஆயிரத்து 826 பேரும் உரிய நேரத்தில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவில்லை. இதேபோல, மதுரையில் 52 ஆயிரத்து 766 பேரும், வேலூர் மாவட்டத்தில் 51 ஆயிரத்து 9 பேரும், சேலத்தில் 50 ஆயிரத்து 285 பேரும் உரிய காலத்தில் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்று மருத்துவத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



நோர்வே, ஒஸ்லோவில் காலநிலை மாற்றத்துக்குக் காரணமாகவுள்ள மனித செயற்பாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.



ஆப்கானிஸ்தானிலிருந்து துருக்கிக்கு தப்பிச்சென்றுள்ள அகதிகள் பலத்த பாதுகாப்புடன் தங்குமிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.



தாய்வான் வாவிகளில் அநேகமாக இரவு நேரங்களில் மீன்பிடிப்பது வழமையாகும். அங்கு மீன்களைக் கவர்வதற்கு நெருப்பின் வெளிச்சம் பயன்படுத்தப்படுகிறது.

# உலக செய்திகள்

# செவ்வாயில் ஆயிரம் மீற்றர் பயணித்தது சூரோங் ரோவர் விண்கலம்



செவ்வாய் கிரகத்திற்கு சீனா அனுப்பிய சூரோங் (Zhurong) ரோவர் விண்கலமானது,

கிரகத்தின் சுற்றுவட்ட பாதையில் ஆயிரம் மீட்டர் பயணித்து புதிய சாதனை படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரோங் ரோவர் தன் 90 நாட்கள் பயணத்தை வெற்றிகரமாக முடித்து தரவுகளை சேகரித்துள்ளதாக சீன விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

குறித்த விண்கலம் நல்ல நிலையில் உள்ளதாகவும் தொடர்ந்து கிரகத்தின் தென்பகுதியில் நீர் இருப்பதாகக் கூறப்படும் இடம் மற்றும் நிலப்பரப்பிற்கு இடையே ஆய்வு செய்ய நகர்ந்து வருவதாகவும் சீன ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தானுக்கு நிதி உதவிகள் நிறுத்தப்படும்

## உலக வங்கி அதிரடி அறிவிப்பு

ஆப்கானிஸ்தானுக்கான நிதி உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படுவதாக உலக வங்கி அதிரடியாக அறிவித்துள்ளது. தலிபான்களின் ஆட்சியில் பெண்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருப்பதாகவும் உலக வங்கி கவலை தெரிவித்துள்ளது.

ஆப்கானில் தற்போதைய நிலைமை மிகுந்த கவலை அளிப்பதாகவும் அது நாட்டின் வளர்ச்சியையும் பெண்களையும் பாதிக்கும்என்றும் உலக வங்கியின் செய்தித் தொடர்பாளர் மார்சலா சான்ச்ஹெஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் வளர்ச்சித் திட்டங்களுக்காக 5.3 பில்லியன் டொலர் நிதி உதவி வழங்குவதாக முன்பு உலக வங்கி அறிவித்திருந்தது. ஆப்கான் மறுசீரமைப்பு நிதியாக சுமார் 12.9 பில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலிபான்கள் மீது நம்பிக்கையற்றிருப்பதாகவும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு உலக நாடுகள் முன்வர வேண்டும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது




# ஆபிரிக்க யானைகளின் எதிர்காலம் ஆபத்திலா?

ஆபிரிக்க காட்டு யானைகளின் எதிர்காலம் ஆபத்தாகமாறக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். காலநிலை மாற்றம் காரணமாக அவற்றின் வளர்ச்சி, உணவுப்பழக்க வழக்கங்களில் திடீர் வேறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

உலகத்தில் அழிந்துவரும் உயிரினங்களை ஐ.யு.சி.என். என்ற அமைப்பு சிவப்பு பட்டியலில் இணைத்து தகவல்களை வெளிப்படுத்தி வருகிறது. இதற்கென உலகம் முழுவதும் விலங்கியல், தாவரவியல் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆபிரிக்க காட்டு யானைகள் குறித்தும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆபிரிக்க யானைகளை, காட்டு யானைகள், சாதாரண யானைகள் என ஆராய்ச்சியாளர்கள் வகைபடுத்தியுள்ளனர். இவற்றில் காட்டு யானைகள் மிகப்பெரிய சொத்தமாக மதிப்பிடப்படுகின்றன.

இவற்றின் இனவிருத்தி வீழ்ச்சியடையும் பட்சத்தில் அது உலகத்துக்கே பேரிழப்பாக இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.





# ‘எங்களுக்கு இறக்கைகள் உள்ளன’ எனும் தொனிப்பொருளுடன் ஆரம்பமான டோக்கியோ பராலிம்பிக்

மாற்றுத்திறனாளிகளுக்கும் உலகில் ஓர் அங்கீகாரத்தைக் கொடுக்கும் 16ஆவது பராலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் இரவு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ‘எங்களுக்கு இறக்கைகள் உள்ளன’ எனும் தொனிப்பொருளுடன் ஆரம்பமாயின. ஜப்பானிய பேரரசர் நருஹிதோ தோக்கியோ பராலிம்பிக் போட்டிகளை அதிகாரபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸின் கணவர் டக்ளஸ் எம்ஹாப், சர்வதேச பராலிம்பிக் பேரவையின் தலைவர் ஆண்ட்ரூ பார்சன்ஸ், சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் தலைவர் தாமஸ் பாக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டோக்கியோ பராலிம்பிக்கில் 163 நாடுகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்து 500 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டு தங்களது திறமை களை வெளிக்காட்டவிருக்கிறார்கள்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகள் முடிந்ததும் பராலிம்பிக் போட்டி நடத்தப்படும். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒரு ஆண்டு தள்ளிவைக்கப்பட்ட 32ஆவது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஜூலை 23ஆம் திகதிமுதல் இம்மாதம் 8ஆம் திகதிவரை நடைபெற்றது.

இந்நிலையில், மாற்றுத்திறனாளி களுக்கான 16ஆவது பராலிம்பிக் போட்டி டோக்கியோவில் நேற்று முன்தினம் முதல் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் 163 நாடுகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்து 500 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டவிருக்கிறார்கள்.

அகதிகள் பாராலிம்பிக் அணி, சிரிய அகதி அலியா இசா, ஆப்கானிஸ்தான் தடகள வீரர் அப்பாஸ் கரிமி ஆகியோர் சர்வதேச பராலிம்பிக் பேரவையின் (IPC) கொடியை RPT இற்காக வழங்கியதால் நாடுகளின் அணிவகுப்புக்கு தலைமை தாங்கினார்.

டோக்கியோ விளையாட்டுகளில் ஆப்கானிஸ்தான் போட்டியிடாவிட்டாலும், ஆப்கானிஸ்தான் கொடி மற்ற 161 தூதுக்குழுக்களுடன் இணைந்து ஒற்றுமையின் அடையாளமாகத் தோன்றியது.

இஸ்ரேலின் பார்வையற்ற



வீரர்களை வழிநடத்திய நாய், பார்வையாளர்களைக் கவர்ந்தது.

### இரண்டாவது முறை

பராலிம்பிக் போட்டிகளை இரண்டு முறை நடத்திய ஒரே நகரம் டோக்கியோ. 1964 டோக்கியோ பராலிம்பிக்கில் 378 விளையாட்டு வீரர்கள் 9 விளையாட்டுகளில் ஆறு இடங்களில் போட்டியிட்டனர்.

### 22 விளையாட்டுகள்

வில்வித்தை முதல் சக்கர நாற்காலி டென்னிஸ் வரை 22 விளையாட்டுகளில் பதக்கங்கள் உள்ளன.

### தகுதியான 10 குறைபாடுகள்

சர்வதேச பராலிம்பிக் பேரவையால் (ஐ.பி.சி.) அங்கீகரிக்கப்பட்ட 10 வகையான உடல், பார்வை மற்றும் அறிவுசார் குறைபாடுகளைச் சுற்றி நிகழ்வு வகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் எட்டு உடல்கள், பலவீனமான தசை சக்தி அல்லது பெருமூளை வாதம் அல்லது முதுகெலும்பு காயம் போன்ற நிலைமைகளால் ஏற்படும் தன்னிச்சையான அசைவுகள் போன்றவை. மேலும் பட்டியலில் தசை பதற்றம், குறுகிய நிலை மற்றும் பிறப்பிலிருந்து ஒரு மூட்டு பகுதி அல்லது மொத்தமாக இல்லாமை உள்ளன.

### 21 இடங்கள்

பராலிம்பிக் மைதானங்கள் ஒலிம்பிக் ஸ்டேடியத்திலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க நிப்பான் புடோகன் மற்றும்



டோக்கியோ அக்வாடிக்ஸ் சென்டர் போன்ற அதிநவீன புதிய அரங்குகள் வரை உள்ளன. பெரும்பாலானவை தலைநகரத்திலும், அண்டை பிராந்தியங்களிலும் உள்ளன.

அதேசமயம், சைஜிக்கிங் போட்டிகள் ஷிஜுவோகா மாகாணத்தில் மவுண்ட் புஜி அருகே இரண்டு இடங்களில் நடைபெறும். சில ஒலிம்பிக் மைதானங்கள் பராலிம்பிக்கில் வெவ்வேறு விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும். அரியேக் ஜிம்னாஸ்டிக் மையமும் அவற்றில் அடங்கும்.

### 4 பில்லியன் பார்வையாளர்கள்

ஒலிம்பிக்கைபோலவே, பராலிம்பிக்கும் பெரும்பாலும் வெற்று அரங்கங்களில் நடைபெறும். வைரஸ் அச்சத்தால் பார்வையாளர்கள் தடைசெய்யப்படுவார்கள். ஆனால், உலகெங்கிலும் ஒரு பெரிய தொலைக்காட்சி பார்வையாளர்களை அடைய அமைப்பாளர்கள் நம்புகிறார்கள்.

லண்டன் 2012ஐப் பார்த்த 3.8 பில்லியனை விட 4.1 பில்லியன் ஒட்டுமொத்த பார்வையாளர்கள் ரியோவில் நடந்த 2016 பராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிட்டனர். இந்த ஆண்டு, துணை-சஹாரா ஆபிரிக்காவிலுள்ள 49 பிரதேசங்களுக்கு விளையாட்டுகளின் உலகளாவிய பார்வையாளர்களை வளர்க்கவும், இயலாமை களங்கத்தை சமாளிக்கவும், இலவசமாக ஒளிபரப்பப்படுகிறது.

### 5,000 பதக்கங்கள்

விளையாட்டுக்காக சுமார் 5,000 தங்கம், வெள்ளி, வெண்கல பராலிம்பிக் பதக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன, இதில் ‘டோக்கியோ 2020’ என்ற வார்த்தைகள் பிரெய்லில் எழுதப்பட்டுள்ளன. ஒலிம்பிக் பதக்கங்களைபோலவே, அவை ஜப்பானில் மக்களால் வழங்கப்பட்ட நுகர்வோர் மின்னணு பொருட்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மறுசுழற்சி செய்யப்பட்ட உலோகங்களிலிருந்து தயாரிக்கப்பட்டன.

### பராலிம்பிக்கில் இலங்கை

டோக்கியோவில் அரங்கேறும்

## இலங்கையிலிருந்து 9 பேர் பங்கேற்பு





பராலிம்பிக் போட்டியில் பங்கேற்க இலங்கையிலிருந்து நான்கு வகையான விளையாட்டுகளின் கீழ் 9 மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றவுள்ளனர். இக்குழுவில் 6 பரா மெய்வல்லுனர்கள், ஒரு பரா படகோட்ட வீரர், ஒரு பரா வில்லாளர், ஒரு பரா சக்கர இருக்கை டெனிஸ் வீரர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

16வது கோடைக்கால பரா ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் 2020

SRI LANKA

ஈடிணையற்ற சாதனைக்கான வலுவூட்டல்

Dialog

## அவுஸ்திரேலியாவுக்கு இரண்டு தங்கங்கள்



அவுஸ்திரேலிய பாரா சைக்கிள் ஓட்ட வீராங்கனை களான பைஜே கிரேக்கோ, எமிலி பெட்ரிகோலா ஆகியோர் டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகளில் முதல் இரண்டு தங்கப் பதக்கம் வென்றார்கள்.

மகளிர் சி 1-3 3000 மீ. போட்டியில் கிரேக்கோ உலக சாதனையுடன் முதலாவது தங்கத்தைப் பெற்றார்.




# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com


## நியூஸிலாந்து வீரருக்கு பங்களாதேஷில் கொரோனா தொற்று உறுதி!

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி வீரர் பின் ஆலெனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

பங்களாதேஷ் மண்ணில் நியூஸிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் பங்கேற்கவுள்ளது. முதல் போட்டி செப்டெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான நியூஸிலாந்து அணியில் இடம்பெற்றவர் பின் ஆலென். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த ‘த ஹண்ட்ரட்’ கிரிக்கெட் தொடரில் பர்மிங்காம் அணிக்காக பங்கேற்றார்.

இவருக்கு இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அங்கு நடைபெற்ற அனைத்து சோதனையிலும் தேறிய இவர், அங்கிருந்து நியூஸிலாந்து அணியில் இணைவதற்காக பங்களாதேஷின் டாக்கா நோக்கி சென்றார். பின்னர் அங்கு நடத்தப்பட்ட கொரோனா வைரஸ் பரிசோதனையில் 48 மணிநேரத்துக்குப் பின் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதுகுறித்து நியூஸிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், “இலகுவான அறிகுறிகள் தெரிந்தவுடன் பின் ஆலென் உடனடியாக ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டார். தற்போது பங்களாதேஷ் மருத்துவக் குழு அவருக்கு சிகிச்சை அளிக்கிறது. எங்கள் அணி வைத்தியரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்’’ என தெரிவித்துள்ளது.




## ஒரு தோல்வியும் தழுவாமல் சம்பியனான சானக்கவின் எஸ்.எல்.சி. க்ரேஸ்




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவந்த எஸ்.எல்.சி. இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் தொடரின் சம்பியன் மகுடத்தை தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணி சூடியது. அந்த அணி எந்தவொரு போட்டியிலும் தோல்வியைத் தழுவாமல் நேரடியாக இறுதிப் போட்டிக்கு தெரிவாகி சம்பியன் மகுடத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.




தொடரின் சம்பியனை தீர்மானிப்பதற்கான மாபெரும் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியும், தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற எஸ்.எல்.சி. க்ரேஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களை குவித்தது.

அணியின் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மினோத் பானுக்க 51 பந்துகளில் 74 ஓட்டங்களையும், அணித்தலைவர் தசுன் சானக்க அதிரடியாக 17 பந்துகளில் அதிரடியாக 48 ஓட்டங்களையும் பெற்றனர். 202 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 42 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் ஓசத பெர்னாண்டோ 27 பந்துகளில் 46 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டார். இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மினோத் பானுக்க தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக அந்த அணியின் தலைவர் தசுன் சானக்க தெரிவானார்.

தொடரில் சம்பியனாக தெரிவான தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணிக்கு இலங்கை கிரிக்கெட் சபையினால் 20 இலட்சம் ரூபா பரிசு வழங்கப்பட்டது. போட்டியில் தோல்வியைத் தழுவி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணிக்கு 15 இலட்சம் ரூபா பரிசு வழங்கப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7